செ.வெ.எண்: 72 நாள்: 30.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரங்களில் பயன்படுத்தும் ஒலிப்பெருக்கிகளை காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை மட்டுமே பயன்படுத்த வேண்டும் - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---------

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 2016 முன்னிட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான தினசரி ஆய்வுக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 29.09.2016 அன்று நடைபெற்றது.

இந்த தினசரி ஆய்வுக் கூட்டத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது.

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதியினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான தினசரி ஆய்வுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மண்டலங்களுக்கு வாகனங்கள் ஒதுக்கீடு செய்தல், கட்சி சார்புடைய தேர்தல்களுக்கு வாக்குச்சீட்டுகள் அச்சிடுவதற்கு அச்சகங்கள் தேர்வு செய்தல், வாக்கு எண்ணும் மையங்கள் தொடர்பான கருத்துருக்கள் அனுப்புதல், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள சட்டப்பூர்வ ஆணைகள் குறித்து விவாதித்தல் போன்ற பல்வேறு தேர்தல் தொடர்பான தகவல்கள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு அனைத்து ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலும் தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தேவையான ஆப்செட் பிரிண்டர்ஸ் தேர்வு செய்யும் பணி முடிக்கப்பட்டு அச்சடிக்கும் பணிகள் விரைவாக துவக்கப்படவுள்ளது. மேலும் வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கும் பொழுது அச்சகங்களில் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தி அனைத்து நிகழ்வுகளையும் பதிவு செய்யவும், வாக்கு எண்ணும் மையங்களுக்கு கருத்துருக்கள் அனுப்புவது தொடர்பாக அந்தந்த பகுதிகளில் தேர்தல் நடத்தும் அலுவலர், துணைக் காவல்கண்காணிப்பாளர் அவர்களுடன் ஆலோசனை மற்றும் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக தடையின்மை சான்று பெற்று கருத்துருக்களை பெற்று அனுப்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரசு அலுவலர்களுக்கு தேவையான வாகனங்கள் வழங்கும் வகையில் அரசு வாகனங்களை தவிர மிகுதியாக தேவைப்படும் வாகனங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மூலம் வாடகைக்கு அமர்த்தவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் வரை தேர்தல் காலம் முழுவதும் தேர்தல் பிரச்சாரங்களுக்காக எந்தவொருவகை வாகனங்களிலும் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிப்பெருக்கிகளை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே வேட்பாளர்கள் பயன்படுத்த வேண்டும் என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்தக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.சந்தோஷ்குமார், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.மிருணாளினி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பொ).திரு.முருகண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**